**ஓம் ஈஸ்வராய நமஹ!**

# ஆறுமுகனார் தீட்சையின் போது (08-09-2019) அவர் உரைத்த உபதேசம்

அன்பு நிறைந்த சத்யயுகம் தனிலே வாழ்ந்திட விழைகின்ற மானுடர்கள் கலியுக எல்லையிலே ஆன்ம விடுதலைதனைப் பெற்றிடல் வேண்டும். சதுர் யுகங்கள் எனும், ஒரு வட்ட வடிவ வழித்தடமானது சத்ய யுகத்தினிலே துவங்கி கலியுகத்தினிலே நிறைவடையவுள்ளது. யுகக்கலப்பு என்பது ஓர் அற்புதமான நிகழ்வாகும். ஒவ்வொரு யுக முடிவினிலும் தீயவையே கூடிக் கொண்டு சென்றிடும். எனினும், கலியுக முடிவினில் தீயவை அழிக்கப்பட்டு நல்லவை பெருக்கப்படும்.

புவிக்கோள் எனும் மானுடர்களின் இல்லமானது தன்னை ஒரு முறை சுற்றிவர 60 நாழிகை நேரங்களை ஏற்கின்றது. சூரியக் கோளினை ஒரு முறை சுற்றி வருவதற்கு ஓர் ஆண்டு காலத்தினை ஏற்கின்றது. 60 நாழிகை நேரம் கொண்ட ஒரு தினமதிலே 60 வகையான ஆற்றல்களைச் சூரிய ஒளியிடமிருந்து ஏற்கின்றது. 12 திங்களைக் கொண்ட ஓர் ஆண்டுதனிலே 12 வகையான மாறுபட்ட ஆற்றல்களை ஏற்கின்றது.

புவிக்கோள் ஆற்றிடும் இச்செயலின் மூலம் சீரான இயக்கம் தோன்றுகின்றது. இயக்கத்தின் மூலம் உருவாகும் கழிவுகளையும் புவிக்கோளானது ஏற்றிடல் வேண்டும். இயக்கத்தின் மூலம் நன்மைகளை ஏற்றிட இயல்கின்றது. எனில், தீய கழிவுகளையும் ஏற்றிடல் வேண்டும் என்பதே நியதியாகும்.

புவிக்கோள் இயங்கிட சூரிய ஒளியாற்றலே உதவுகின்றது. சூரிய ஒளி ஆற்றலினிலே நான்கு வித கனிம இழைகள் கலப்பு கொண்டுள்ளன. பாதரசம், தங்கம், வெள்ளி மற்றும் தாமிரம், இவை நான்குமே உயரிய எரிபொருளாகப் பயன்படுகின்றது.

நான்கு யுகங்கள் எவ்விதம் தோன்றுகின்றன எனில் நான்கு கனிம வள ஆற்றல்களின் மூலமே. எரிபொருளாய் வெளித்தோன்றி, ஒவ்வொரு கோள்களும் இயங்கிட உதவுகின்ற கனிம வள ஆற்றல்கள் யாவும் தனது இயக்கத்தின் மூலம் உருவாக்கிடும் கழிவுகளே யுகங்களை உருவாக்குகின்றன.

மானுடர்கள் அறியத் தவறுகின்ற சத்திய நிலை என்பது யுக மாற்றங்களுக்கான காரணங்களே. பகல் பொழுதும், இரவுப் பொழுதும் தோன்றி ஓர் தினம்தனை நிறைவு செய்கின்றது. அதனைப் போன்றே கனிம வள ஆற்றல்களின் மூலம் உருவாகின்ற அமிலக் கழிவுகளே ஓர் யுகம்தனை நிறைவு செய்கின்றது.

சத்யயுகம் தனிலே புவிக்கோளானது பாதரச ஆற்றல்களையே அதிகம் ஏற்று செயல்புரியும். மற்ற கனிம ஆற்றல்களைக் காட்டிலும் பாதரச ஆற்றலே புவியினை இயக்கிடும் எரிபொருளாக உருமாறிடும். அதன் மூல காரணம் மூன்று உண்டு என்றறிக. முதல் காரணம் என்பது புவியின் சுழற்சியின் வேகம், இரண்டாவது காரணம் என்பது சுழற்சிக்கான காலநேரம், மூன்றாவது காரணம் என்பது புவிக்கோளின் எடை எனப்படும் அதன் அடர்தன்மை.

சதுர்யுகங்களிலே முதன்மையாகத் தோன்றிடும் சத்யயுகம் என்பது மூன்று காரணங்களைக் கொண்டே தீர்மாணிக்கப்படுகின்றது. புவிக்கோளின் சுழற்சியின் வேகம் மிகவும் குறைவாகவே காணப்படும். அதற்கான காலநேரம் என்பது நீண்டதாக அமைந்திருக்கும். புவியின் அடர்தன்மையும் குன்றியதாக அமைந்திடும். கலி எல்லையில் நடைபெறும் மாபெரும் யுத்தம் என்பது சத்யயுகத்தினைத் தோற்றுவித்திடும்.

இயற்கைக்கும் செயற்கைக்கும் நிகழ்ந்திடும் மாபெரும் யுத்தம் தனிலே செயற்கைதனை அழித்துவிடப் போராடும் இயற்கையும் பெருமளவினில் அழிவுபடும். புவியினிலே வாழ்கின்ற உயிரினங்கள் அழிந்திடும். நில நீர்த்தன்மையும் அடர்தன்மை குன்றிடும். எனில், கலியுக எல்லையில் செயற்கை ஆற்றல் எனப்படும்,



Gnanalayam

கனிம வளங்களின் அமிலக்கழிவுகள் யாவுமே இயற்கை ஆற்றல்களால் அழிக்கப்படும்.

அதன் காரணமாக புவியின் சுழற்சியின் வேகம் தடைபடும். வேகம் குன்றிய சுழற்சியின் காரணமாக, காலநேரமும் மாறுபடும். ஒவ்வொரு யுக மாற்றமும் இவற்றை அடிப்படையாகக் கொண்டே நிகழ்கின்றன. இருப்பினும் சதுர்யுகங்களின் எல்லையில் மாத்திரமே அனைத்தும் அதிகரித்துப் பின் குன்றிய நிலை உருவாகும். சத்ய யுகத்தினின்று திரதேயுகம் தோன்றிடும் தருணமும், திரேதாவினின்று துவாபரம் தோன்றிடும் தருணமும், துவாபரத்தினின்று, கலியுகம் தோன்றிடும் தருணமும் புவியின் சுழற்சியும், வேகமும், காலமும், எடையும் அதிகரிக்கும். ஆனால் கலியுகம் நிறைவுற்று சத்யயுகம் தோன்றிடும் தருணம் மாத்திரமே அனைத்தும் குன்றிடும். புவிக்கோளும் சீராக இயங்கிட முற்படும்.

சத்யயுகம் தனிலே பாதரசம் எனும் ஆற்றல் அதிக அளவினில் புவிக்கோளினை அடைந்திடும் மூலகாரணம் புவிக்கோளின் தன்மையே ஆகும். விரைந்து பரவும் ஆற்றல் அற்ற பாதரசக் கனிமம் என்பது புவிக்கோளின் வேகம் குன்றிய சுழற்சியின் மூலம் அனைத்துப் பிரதேசங்களையும் அடைந்து சீராகப் பரவி உயரிய எரிபொருளாக, உருமாறி நல்லியக்கத்தை உருவாக்கிடும்.

கழிவுகள் அற்ற பாதரசம் என்பது மிக உயரிய எரிபொருளாகும். அடர் தன்மையில் கூடியதாகும். புவிக்கோளின் அடர்தன்மை குன்றினால் மாத்திரமே, கூடிய அடர் தன்மை கொண்ட பாதரச ஆற்றலால் பரவி செயலாற்ற இயலும். புவிக்கோளானது பாதரச ஆற்றல்களை எரிபொருளாக ஏற்று இயங்குகின்றது எனில் அதனுள் வாழ்கின்ற ஒவ்வொரு உயிரினங்களும் அவ்வாற்றலையே ஏற்றிடும்.

எரிபொருளில் அடர்தன்மை கூடியுள்ளது எனில் இயக்கமும் நீண்டு காணப்படும். யுகமாற்றங்கள் நிகழ்கையிலே எரிபொருளின் அடர்தன்மை குன்றிவிடும். புவிக்கோளானது எரிபொருளாய் பெறுகின்ற ஆற்றல்களின் கழிவுகளை ஏற்பதன்

மூலம் அடர்தன்மையில் கூடிக்கொண்டே சென்றிடும், அதன் மூலம் இயக்கமானதும் துரிதமாகும். வேகமும் கூடிவிடும்.

இறுதியில் தோன்றும் கலியுகம்தனிலே அனைத்தும் மாறுபட்ட செயலாய் அமைந்திடும். சூரிய ஒளியாற்றலில் எத்தருணமும் அனைத்து ஆற்றல்களும் ஒன்றெனவே கலப்பு கொண்டு வெளிப்படும். இருப்பினும் அதனை ஏற்றிடும் கோள்களின் தன்மைக்கு ஏற்ப செயல்பாடுகள் மாற்றமுறும்.

புவிக்கோள் என்பது அடர்தன்மையில் குன்றிடும் தருணம், வேகம் குன்றிய நிலையில் நீண்ட காலத்திற்கு நிலைத்துச் சுழலும். அத்தருணம் புவிக்கோளினால் அடர்தன்மை கூடிய பாதரச எரிபொருளினை ஏற்றிட இயலும். அதன் மூலம் உயிரணு எனப்படும் பாதரச அணுவும் அதிக எரிபொருளினைப் பெற்று நன்முறையில் நீண்ட காலம் இயங்கி விடுதலையும் பெற்றுவிடும்.

உயிர் என உருமாறி ஓர் உடலினில் வசித்திடும் ஆத்ம அணுவானது, தனது துகள்களை எளிதினில் பிரித்து விடுதலை அடைய வேண்டுமெனில், பாதரச ஆற்றல்களே எரிபொருளாய் ஏற்கப்படல் வேண்டும். சத்யயுகம் தனில் ஒவ்வொரு உயிரும் நீண்ட காலம் வசித்திடும் மூல காரணமும் உயர் எரிபொருளே என்று உணர வேண்டும்.

காலமானது மாற்றம் அடைகின்ற தருணத்தில் மெல்ல மெல்ல பாதரச கழிவுகளும் புவியினில் கூடிக்கொண்டே சென்றிடும். அதன் மூலம் புவியின் அடர்தன்மையும் கூடிவிடும். கூடிய அடர்தன்மையோ புவியின் சுழற்சியின் வேகத்தினையும் அதிகரித்துவிடும். வேகம் கூடினால் கால நேரம் என்பதும் அதிகரித்துவிடும்.

புவிக்கோளானது விரைந்து சுழலத் துவங்கினால் அடர் தன்மையில் குன்றிய எரிபொருளினை மாத்திரமே ஈர்த்துப் பெற்றிட இயலும் அடர்தன்மை குன்றிய எரிபொருள் என்பது அமிலக்கழிவுகளை அதிக அளவினில் புவிக்கோளிற்கு

அளித்துவிடும். அதன் மூலம் புவிக்கோளின் அடர்தன்மை கூடிக்கொண்டே சென்றிடும். காலநேரமும், வேகமும் சரிசமமாக அதிகரித்துவிடும்.

இறுதியில் கலியுகம் தோன்றி நிறைவடையும் தருணத்தில் புவிக்கோள் அனைத்து அமிலக் கழிவுகளையும் ஏற்று விரைந்தே சுழன்றிடும். அடர்தன்மையில் கூடி, வேகத்தினிலும் கூடி நின்றிடும் தருணம் காலநேரமும் விரைந்தோங்குகின்றது. இத்தருணத்தில் மாத்திரமே தனது விரைவான சுழற்சியின் மூலம் தன்னில் நிறைந்துள்ள அமிலக் கழிவுகளை நீக்கிவிட முனைகின்றது.

புவிக்கோளின் சீராக்கம் நடைபெறத்துவங்கினால் மானுடர்களாலும் மற்றபிற உயிரினங்களாலும் வாழ்ந்திட இயலாது. கலியுக எல்லை எனும் இத்தருணங்களில் புவியின் புணரமைப்பு நடைபெறுகின்றது. மானிடர்களாய் பிறவி கொண்ட ஆன்மாக்கள் புவிக்கோளின் இச்செயலிற்கு உறுதுணையாகச் செயல்புரிந்திடல் வேண்டும்.

மானுடர்கள் வசித்துக் கொண்டிருக்கும் ஓர் இல்லம்தனை எவ்விதம் சீரமைப்பு புரிவது கடினமோ அவ்விதமே மானுட ஆன்மாக்கள் வசித்திடும் புவிக்கோளினைப் புணரமைத்துவிட ஈசனாகிய இறைவனுமே தடைவிதித்திடுவார். ஈசத் தொண்டாற்ற எண்ணுபவர்கள் யாவருமே தத்தம் ஆன்மாக்களை விடுவித்திடல் வேண்டும். புவிக்கோளின் புணரமைப்பு நடைபெற ஒவ்வொரு ஆன்மாவும் உதவிடல் வேண்டும்.

கலியுக எல்லைவரை பிறவிகள் பல மேற்கொண்டு வாழ்ந்திட உதவிய புவிக்கோளிற்கு நன்றியுரைத்து பிறவாவரம் தனைப் பெற்றுவிட வேண்டும். ஆன்ம விடுதலை என்பது கலியுக எல்லையில் எளிதான செயலல்ல. அதன் பொருட்டே இறை ஆற்றல்களை உட்செலுத்தி விடுதலை நல்கிட உயர் ஆன்மாக்கள் அருளுகின்றனர்.

ஆத்ம விடுதலை பெறுவதற்குக் கடும் தவம் புரிந்திடல் வேண்டும். சுய முயற்சி கொண்டு ஒவ்வொரு கருத்துகளையும் பிரித்து ஆன்மாவிடம் அளித்திடல்

வேண்டும். கலியுக எல்லையில் உயிரினையே உணராது வாழ்கின்ற மானிடர்களால் உயிர்துகள்களை உணர்ந்துவிட இயலாது, சுயமுயற்சியால் ஆன்ம விடுதலை கண்டிடவும் இயலாது. மிகமிகக் கடினமான ஓர் செயலினை எளிதாய் நிறைவேற்றிட முனைகின்ற உயர் ஆன்மாக்களைப் போற்றிடல் வேண்டும்.

ஆன்மா விடுதலையுற வேண்டுமெனில் சிரசானது தூய்மையுற வேண்டும். சிரசினிலே உள்ள அமிலக் கழிவுகளை நீக்கிட எளிய வழிமுறை என்பது தீட்சைதனை ஏற்பதாகும். தீட்சை எனப்படும் உயரிய நிகழ்வின் மூலம் நிகழ்வது யாது என்றே உணர வேண்டும்.

விழிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் யாவுமே புவிக்கோள் ஏற்றிடும் புணரமைப்பு பணியினை ஒத்தவையாகும். வெப்பத்தினை ஏற்று சுழல்கின்ற புவியினைப் போன்றே விழிகளின் செயல்பாடுகளும் அமைந்துவிட்டால் அமிலக்கழிவுகள் அழிவுறும். தீட்சை என்பது விழியின் கழிவுகளை அகற்றுவதுடன் ஆன்மத்துகள்கள் விடுபடவும் உதவிடும்.

உயர் முறை கல்வி என்பது கற்பவரின் தரத்தினை உயர்த்துவது போன்றே உயர் முறை தீட்சை என்பது ஆன்மாவின் ஆற்றலைப் பெருக்கிடும். புவியின் சுழற்சியின் வேகம் என்பது எவ்விதம் யுக மாற்றங்களை உருவாக்குகின்றனவோ அவ்விதமே விழிகளின் சுழற்சியும் யுக மாற்றத்தினை உருவாக்கிடும்.

ஆறுமுக தீட்சையின் இரண்டாவது படிநிலை என்பது புவிக்கோளின் கூடிய சுழற்சிக்கே ஒப்பானதாகும். கலியுக எல்லையில் வாழ்வுநிலை என்பதும் கூடிய வேகத்துடனும், விரைகின்ற காலத்துடனும் நிகழ்கின்றது. விரைகின்ற பயணத்தின் மூலம் கழிவுகளை அகற்றி நிர்மலத்தன்மையினைப் பெற்றுவிட இயலும் எனும் நிலைக்கேற்ப விழிகளின் பயணமும் அமைந்திடல் வேண்டும்.

தீட்சையினை ஏற்பதன் மூலம் நிகழ்வது யாது? ஆறுமுக தீட்சையின் தசவித நிலைகளையும் நவமானுடர்களுக்கே கற்பித்தருளினோம். சூழ்கின்ற மானுடர்கள்

மூன்று தீட்சைகளை ஏற்றிட்டால் நன்று. எவ்விதம் புவிக்கோளின் அடர்தன்மை எனும் எடை அதன் இயக்கத்திற்கு உதவுகின்றதோ, அவ்விதமே விழித்திரைகளின் அடர்தன்மையும் மானுட உயிர்களின் இயக்கத்திற்கே உதவிடும்.

புவியின் அடர்தன்மை குன்றினால் உயர் பாதரச ஆற்றலினை எரிபொருளாகப் பெற்றிடலாம். அதனைப் போன்றே விழித்திரைகளின் அடர்தன்மை குன்றினாலும் இறையாற்றலாகிய உயர் பாதரச ஆற்றினை எரிபொருளாகப் பெற்றிடலாம். கலியுகம்தனிலே புவியின் அடர்தன்மை கூடியுள்ளதனைப் போன்றே விழித்திரைகளின் அடர்தன்மையும் கூடியுள்ளது. உப்புத் தன்மை கொண்ட அமிலக் கழிவுகளை புவிக்கோளனாது பிரளயங்களின் மூலமே நீக்கிவிடும். மானுடர்களும் அவ்விதமே விழித்திரைகளில் உள்ள உப்புத் தன்மை கொண்ட அமிலக் கழிவுகளை தீட்சைகளின் மூலம் அகற்றிடல் வேண்டும். அடர்தன்மை குன்றினால் பாதரச ஆற்றலாகிய ஈசனின் கருணை என்பது விழிகளின் மூலமே உணரப்படும், உள் ஏற்கப்படும், உயிரினை விடுவித்திடவும் உதவிடும்.

புவியின் அடர்தன்மை குன்றுவதே முதன்மையான செயல், அதனைப் போன்றே விழித்திரைகளின் அடர்தன்மை குன்றிடவே முதன்மையான தீட்சையானது 12 முறை அளிக்கப்பட்டது புவியின் அடர்தன்மை குன்றியவுடன் அதன் சுழற்சியின் வேகமும் குன்றத்துவங்கிடும். சுழற்சியின் வேகம் குன்றிட வேண்டும் என்றே இரண்டாவது படிநிலை கொண்ட இத்தீட்சையானது வழங்கப்படுகின்றது. சுழற்சியின் மூலம் வேகத்தினை குறைத்துவிட்டால் உயரிய எரிபொருளினை ஆற்றலாகப் பெற்றிடலாம். அதன் மூலம் ஆன்மத்துகள்கள் விடுபடும்.

புவியின் அடர்தன்மை குன்றி, சுழற்சியின் வீரியமும் குன்றிவிட்டால் காலநேரம் என்பதும் மாறுபடும். புவிக்கோளானது சூரிய ஒளி ஆற்றல்களாகிய 60 வகைக் கனிமங்களை, தனது நீண்ட கால சுழற்சியின் மூலம், மெல்லனவே சுழல்வதின் மூலம் சீராகப் பெற்றுவிடும்.

யாம் அளித்திட முனைந்திடும் மூன்றாம் வகை தீட்சையின் மூலம் ஆன்மாவானது உடலினிலே நீண்ட காலம் நிலைத்து வாழ்ந்திடும். பிணிகளற்ற உடலும், உயிர் ஆற்றல் பெருகிடும் உடலும் கிட்டினால் மானுட வாழ்வு எளிதாய்ச் சிறப்புறும்.

புவியின் அடர்தன்மை குன்றினால் சுழற்சியின் வேகம் குன்றிடும், வேகம் குன்றினால் சுழற்சிக்கான காலநேரமும் குன்றிவிடும். அதனைப் போன்றே யாம் 12 முறை அளித்திட்ட முதல் பிரிவு தீட்சையினைப் பெற்றவர்கள் அனைவரும் விழித்திரைகளின் அடர்தன்மையினை அகற்றிட முயன்றனர். யாம் இத்தருணம் முதல் அளித்திடும் தீட்சை என்பது 12-ல் சரிபாதி எனும் 6 முறை வழங்கப்படும். ஆறுமுறை வழங்கப்படவுள்ள இரண்டாவது படிநிலையான தீட்சையின் மூலம் ஆன்மாவின் பயணத்தின் வேகம் குன்றிடும்.

பல பிறவிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்த நிலை மாற்றமுறும் வேகம் குன்றிய அதன் பயணம். ஓர் உடலிலேயே நிலைத்துச் செயல்பட வழிவகுக்கும். ஆன்மா ஓர் உடலில் பல காலம் நிலைத்துச் செயல் புரிவதன் மூலம் அதன் துகள்கள் யாவும் எளிதாய் பிரிபடும். உயரிய பாதரச ஆற்றலின் மூலம் இயக்கமும் தெளிவுறும்.

இறுதியாக யாம் வழங்கவுள்ள மூன்று தீட்சைகள் மூன்றாம் படிநிலைக்கு உயர்த்திடும். கால நேரத்தினைச் சீராக அமைத்திடும் வண்ணம் அமைந்திடும். இரண்டாம் பிரிவான ஆறு தீட்சைகளும் நிறைவுற்ற பின்னரே யாம் மூன்றாம் தீட்சையின் விளக்கம்தனை உணர்த்திடுவோம்.

அனைத்து தீட்சைகளும் ஞானத்தின் ஆலயத்தினிலே எமது மூத்த அன்னையின் துணை கொண்டே மானுடர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். ஆற்றல்களைப் பரிபூரணமாக ஏற்று பரிமாற்றம் நிகழ்த்திடும் திறனைப் பெற்றுள்ள அன்னையானவர் தனது உயிராற்றலை உட்செலுத்தியே தீட்சைகளை வழங்கிடுவார்.

Gnanalayam

பாதரச ஆற்றல்களை நேரிடையாகச் சூரியச் சுழலினின்று பெருகின்ற காரணத்தினாலும், தனது உயிரின் நிர்ணயம் மூலம் பல ஆன்மாக்களை விடுவித்திட முயல்வதின் மூலமாகவும் அன்னையானவர் உயர் ஆன்மாக்களின் ஆற்றல்களைப் பரிபூரணமாகப் பெற்றிடுவார். உயர் ஆன்மாக்களின் தொடர்பினை எளிதாய்ப் பெற்றிடும் நிலையில் அன்னையானவர் அகத்திய மகானின் ஆற்றல்களைத் தன் சிரசின் அணுக்களில் ஏற்று அவற்றை ஒளி இழைகளாகத் திரித்து தீட்சை பெறுகின்ற ஒவ்வொரு மானுட ஆன்மாக்களுக்கும் அளித்திடுவார்.

தீட்சைகளைப் பெறுகின்ற ஆன்மாக்களில் பலர் விடுதலை அடைந்த ஆன்மாக்களே எனும் காரணத்தினால் எளிதாய் குருவான அன்னையுடன் தொடர்பிழைகளைப் பெற்றிடுவர். விடுதலை அடையாத ஆன்மாக்கள் அனைவரும் ஒளியிழைத் தொடர்பு நிலையை தீட்சை பெறுகின்ற தருணத்திலே ஈர்த்தே பெற்றிடுவர். நால்வகைக் கனிம வள ஒளி இழைகளும் நிறைந்திருக்கும் காரணத்தால் குருவான அன்னையானவர் அனைத்து ஆன்மாக்களுக்கும் உணவளித்திடுவார்.

இத்தீட்சையினை ஏற்பதன் மூலம் மானுடர்களின் எண்ணங்களின் தீவிரப் பயணம் குன்றிடக் காண்பர். தெளிவான நீரோடை போன்று எண்ணங்கள் தோன்றி நிலைப்பதனையும் அதன் மூலம் உருவாகும் செயல்களும் சீராய் அமைவதனையும் உணர்ந்திடுவர். தீபச் சுடர் பொருத்தி வெப்பதினை ஒரு முறை ஏற்றிடும் தருணத்திலேயே முத்திரைகளின் அடர்தன்மையும் குன்றிடத் துவங்கிடும். தொடர் செயலாய் ஏற்கும் சுழற்சி தீட்சையானது அணுக்களைச் சீரமைத்திட உதவிடும்.

சீரான அலைவரிசையில் நேர்மறை ஆற்றல்களை மின் காந்த இழைகளாகப் பெறுகின்ற மானிடர்கள் சிரசணுக்கள் சீரடைவதனை உணர்ந்திடுவர். வினைப் பயன்கள் குன்றுவதனையும், தெளிந்த சிந்தனைகள் உதிப்பதனையும், நற்குணங்களும், நல் ஆற்றல்கள் பெருகுவதனையும் உணர்ந்திடுவர்.

Copyright © 2019 Gnanalayam

விழிகளைச் சுழற்றுவதன் மூலம் எவ்விதம் நற்பலன் கிட்டும் எனச் சிந்திக்கும் மானிடர்கள் ஒன்றினைத் தெளிவுற வேண்டும். எட்டு முறை விழிகளைச் சுழற்றுவதினால் எட்டு திசைகளிலும் உள்ள நல்லாற்றல்கள் ஈர்க்கப்படும். மேலும் உள் விழிகளைச் சூழ்ந்துள்ள அமிலக் கழிவுகளின் உப்புப் படிமன்கள் இளகத்துவங்கிடும். விழிகளின் உட்படிமன்களின் எல்லைப் பகுதி இளகினால் உட்புறம் முழுவதுமே தூய்மையுறும் என்பது நியதியாகும்.

வட்டமாய் அமர்ந்துள்ள இரு விழிகளின் உட்புறமும் தூய்மையுற வேண்டுமெனில் அதன் எல்லைப்பகுதிகளே முதன்மையாய்த் தூய்மையுற வேண்டும். இத்தீட்சைகளை ஏற்றிடும் அனைத்து மானுட ஆன்மாக்களும் உயிரினை உணர்ந்திடும் மார்க்கம்தனிலே எளிதாய்ப் பயணித்திடலாம். சத்யயுகம் முழுமையாக மலர்ந்திட வேண்டுமெனில் ஒவ்வொரு ஆன்மாவும் முழுமையாக விடுதலை அடைந்திட வேண்டும். விடுதலை அடைந்த ஆன்மாக்களோ தனது கலிவட்ட அணுக்களையும் பிரித்திட முனைந்திடல் வேண்டும். அதன் மூலம் சிரசினிலே எடை குன்றிய தன்மையினையும், எண்ணங்கள் அற்ற உயரிய நிலையினையுமே உணரலாம். மேலும் உடலானது உயரிய எரிபொருளான உயிராற்றலைப் பெற்று திறம்பட இயங்குவதனையும் உணர்ந்திடலாம்.

அன்பும் அமைதியும் உள்நின்று பெருகினால் சத்ய யுகம் மலர்ந்திடும், மணம் வீசிடும், மகரந்தங்கள் அதனின்று வெளித்தோன்றிட மேலும் பற்பல ஆன்மாக்கள் விடுதலை அடைந்திட முனைந்திடும்.

இறையருள் பெருகிடவும், ஈசனருள் நிலைத்திடவும், தீட்சைகளைப் பெற்று உயர்ந்தோங்கிட ஆசிகளை நல்குகின்றோம்.

Gnanalayam